
## திராவிடத்தால் வாழ்கிறோம்

862

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்

# கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

14

படங்கள் உதவி : ஞானம்

# வாழ்க்கைப் பக்கங்களைப் புரட்டிய 'பராசக்தி' !





**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

1952-ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் 'பராசக்தி'. இந்தத் திரைப்படம் பேசாத விஷயங்களே இல்லை என்கிற அளவுக்கு, 1950-களின் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசியது. குறிப்பாக, திராவிட இயக்கத் தலைவரான கலைஞரின் பன்மைத்துவப் பார்வை மிகச்சிறப்பாக வெளிப்பட்ட திரைப்படங்களில் முதன்மையான ஒன்றாக (Masterpiece) 'பராசக்தி' திரைப்படம் விளங்குகிறது.

மூலக்கதை எம்.எஸ்.பாலசுந்தரம். திரைக்கதை - வசனம் கலைஞர். இயக்கம் கிருஷ்ணன் பஞ்சு. நேசனல் பிக்சர்ஸ் மற்றும் ஏவி.எம் தயாரித்தது. கலைஞர் தனது கொள்கையை முழுமையாகவும் இத்தனை தீவிரமாகவும் 'பராசக்தி'யில் முன்வைத்தபோது அதனை ஏற்றுக்கொண்டு ஒத்துழைத்த தயாரிப்பாளர் நேசனல் பிக்சர்ஸ் பெருமாள், பகுத்தறிவு இயக்க ஆதரவாளர் என்பதையும், திரைப்படத்தை இயக்கிய இரட்டையர்களான கிருஷ்ணன்- பஞ்சு அவர்களின் முற்போக்கு மனப்பான்மையையும் நாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

### படத்தின் கதை

படத்தின் கதை மிகச் சிறியதுதான். மதுரையில் வசிக்கும் மாணிக்கம் பிள்ளையின் மூன்று மகன்கள் ரங்கோனில் சம்பாதித்து அனுப்புவதால், ஓரளவு வசதியாக மாணிக்கம் பிள்ளையும் அவர் மகள் கல்யாணியும் வாழ்கின்றனர். மகளுக்குத் திருமண ஏற்பாடு செய்கிறார் மாணிக்கம். இரண்டாம் உலகப் போர் தொடங்கி விடுவதால், மகன்களால் திருமணத்திற்கு வர முடியவில்லை. மாணிக்கம் பிள்ளை கடன் வாங்கி சிறப்பாகத் திருமணத்தை முடிக்கிறார்.


ரங்கோனில் இருந்து இந்தியா செல்வதற்கு கப்பலில் ஒரு டிக்கெட் மட்டும் கிடைப்பதால், கடைசித் தம்பி குணசேகரனிடம் தங்கைக்குத் தேவையான நகை, பணம் அனைத்தையும் கொடுத்து, அண்ணன்கள் அனுப்பி வைக்கின்றனர். ஆனால், குணசேகரன் சென்னை வந்து, 'ஜாலி' எனும் ஒரு நடன மாதுவிடம் ஏமாந்து உடைமைகள் அனைத்தையும் பறிகொடுத்து விடுகிறான். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மனநலம் பாதித்தவன் போல் வேடமிட்டு சுற்றித்திரிகிறான்.

அந்த சமயத்தில்தான் விமலாவைச் (பண்டரிபாய்) சந்திக்கிறான். அவளிடம் தனது கதையைச் சொல்கிறான். குணசேகரன் மீது காதல் கொள்ளும் விமலா அவனுக்கு அறிவுரை சொல்கிறாள்.

இதற்கிடையே கல்யாணியின் பிரசவத்தின் போது, மருந்து வாங்கச் செல்லும் வழியில், அவளது கணவன் வேணு (டி.கே.ராமச்சந்திரன்) விபத்தில் சிக்கி உயிரிழக்கிறான். அந்த அதிர்ச்சியில் மாணிக்கம் பிள்ளையும் மடிகிறார். கல்யாணி கைக்குழந்தையுடன் அநாதையாகிறாள். தந்தை வாங்கிய கடனுக்கு வீடும் பறிபோகிறது. வாழ வழியின்றி, கல்யாணி இட்லி சுட்டுப் பிழைக்கிறாள். வேலு எனும் மைனரும் அவனது கூட்டாளிகளும் கல்யாணியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபடுகின்றனர்.

அப்படிப்பட்ட சூழலில் மதுரைக்கு வந்து சேரும் குணசேகரன் தனது தங்கையைக் கண்டடைந்து அவளைப் பாதுகாக்க முனைகிறான். தனது தங்கையிடம் தவறாக நடக்க முனையும் காளிகோயில் பூசாரியையும், கள்ள மார்க்கெட் வியாபாரி நாராயண பிள்ளையையும் (வி.கே.ராமசாமி) தாக்கி உதைக்கிறான். அதனால் கொலைக் குற்றம்சாட்டப்பட்டு, நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுகிறான். அதேபோல வாழ வழியின்றி, தனது குழந்தையின் பசியைப் போக்க வழியின்றிப் போகும் நிலையில், கல்யாணி, தனது குழந்தையை நதியில் வீசிவிட்டு, தானும் குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முற்படுகிறாள். ஆனால், காவலர்கள் அவளைக் காப்பாற்றி, கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்து வருகின்றனர்.

உலகப்போர் தீவிரமடைவதால், மூத்த மகன் சந்திரசேகரன் (சகஸ்ரநாமம்) அவரது மனைவி சரஸ்வதி (சுசீலா) மற்றும் தம்பி ஞானசேகரன் (எஸ்.எஸ்.ஆர்.) ஆகியோர் தரைவழியாக நடந்தே நாடு திரும்புகின்றனர். வழியில் ஜப்பான் குண்டு வீச்சில் ஆளுக்கொரு திசையாகப் பிரிந்து, இறுதியாக தமிழ்நாடு வந்து சேர்கின்றனர். மூத்தமகன் சந்திரசேகரன் தமிழ்நாட்டிற்கு வந்து நீதிபதியாகி விடுகிறார். அவரிடமே கல்யாணியின் வழக்கு விசாரணைக்கு வருகிறது. வழக்கு விசாரணையின் இடையே அவள்தான், தனது தங்கை என்பதை அறிந்து மயக்க முற்று இருக்கையிலிருந்து கீழே சரிகிறார். வழக்கு வேறு நீதிபதியிடம் (கவிஞர் கண்ணதாசன்) செல்கிறது.





> **வழக்கம் போலவே நாயகியை, நாயகனுக்கும் ஒரு படி மேலாக அறிவும் ஆற்றலும் உடைய பெண்ணாக 'பராசக்தி'யிலும் கலைஞர் படைத்துக் காட்டியிருப்பார்.**

தனது தங்கைக்காக குற்றவாளிக் கூண்டில் நின்றபடியே, குணசேகரன் வாதிடுகிறான். இறுதியில், கல்யாணி ஆற்றில் வீசிய குழந்தையை, விமலா காப்பாற்றிப் பாதுகாத்து, நீதிமன்றத்தில் கொண்டுவந்து ஒப்படைக்கிறாள். கூடவே, குணசேகரன்தான் கல்யாணியின் உடன்பிறந்த அண்ணன், அவளைப் பாதுகாக்கவே பூசாரியைத் தாக்கினான் என்று சொல்கிறாள். அதனால், கல்யாணியும் குணசேகரனும் விடுவிக்கப்படுகின்றனர். அவர்கள் தங்களது அண்ணன் நீதிபதி சந்திரசேகரனைச் சென்று சந்திக்கின்றனர். யதார்த்தமாக ஞானசேகரனும் அங்கு வந்து சேர்கிறான். குடும்பம் மீண்டும் ஒன்று சேர்கிறது. விமலாவை குணசேகரனுக்கு சுயமரியாதைத் திருமணம் செய்விக்கவும் முடிவு செய்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே 'பராசக்தி'யின் கதை.

### பதுக்கலை அம்பலமாக்கியது!

ஒருபுறம் ரங்கூன், பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைக்கப் போய் இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்டு அகதிகளாக நாடு திரும்பிய தமிழர்களின் துயரங்களை 'பராசக்தி' பேசுகிறது என்றால், மறுபுறம் உள்நாட்டில் வாழும் தமிழர்களுக்கிடையே பஞ்சம், பசி, பட்டினியில் வாழும் எளிய மக்களைப் பற்றியும் பேசுகிறது. கூடவே, அந்தப் பசிக்கும் பஞ்சத்திற்கும் காரணமான பதுக்கல்காரர்களின் பேராசை பற்றியும் பேசியது.

அன்றைய அரசையும் ஆளும் வர்க்கத்தாரையும் மட்டுமல்ல, பாதிக்கப்பட்டதாகச் சொல்லும் கதாநாயகனின் சுயநலப்போக்கையும் சுட்டிக்காட்டி, நாயகி விமலா (பண்டரிபாய்) விமர்சிக்கும் காட்சியும் படத்தில் உண்டு. அதாவது வழக்கம் போலவே நாயகியை, நாயகனுக்கும் ஒரு படி மேலாக அறிவும் ஆற்றலும் உடைய பெண்ணாக 'பராசக்தி'யிலும் கலைஞர் படைத்துக் காட்டியிருப்பார்.

குணசேகரனைப் பார்த்து, நாயகி சொல்கிறாள், 'உன்னை ஏமாற்றி உனது பணத்தைப் பறித்துக்கொண்டு நடுத்தெருவில் விட்டவளை, நான் பாராட்டுகிறேன். அவள் அப்படிச் செய்யாதிருந்தால், நீயும் பணக்காரர்களில் ஒருவனாகத்தானே இருந்திருப்பாய்? ஏழைகளின் உலகத்தை நீ அறிந்திருக்க மாட்டாய் அல்லவா? இப்போதுகூட உனது ஒரு தங்கைக்காகத்தானே நீ கவலைப்படுகிறாய்? இந்த நாட்டில் துயரப்படும் எண்ணற்ற தங்கைகளைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா? ' என்று கேட்கிறாள்.

குணசேகரன் அதிர்ச்சியடைந்து 'வாழ்க்கைப் புத்தகத்தின் பக்கங்களை இப்படிப் புரட்டுகிறாயே? இதனை யாரிடம் கற்றாய்?' என்று கேட்கிறான். அண்ணாவிடம்தான் என்று விமலா சொல்கிறாள்.

அதாவது, அறிஞர் அண்ணாவையும் தந்தை பெரியாரையும் கலைஞர் திரைப்படத்திற்குள் கொண்டு வந்து விடுவதுடன், அவர்களுக்கிடையே 1952-இல் நிலவிய அரசியல் வேறுபாட்டையும் மிக லாவகமாக எடுத்துச் சொல்லி, ஆனாலும் நாங்கள் ஒரே குடும்ப உறுப்பினர்கள்தான் என்பதையும் சொல்கிறார். அதுமட்டுமல்ல, விமலாவின் அண்ணன் பகுத்தறிவாளராக, ஒரு கழகக்காரராகப் படைக்கப்பட்டிருப்பதுடன் அவரது அற்புதமான ஒரு மேடைப்பேச்சும் படத்தில் இடம்பெற்றிருக்கும்.

**...காட்சி விரியும்**

---

## கவனம் ஈர்க்கும் அரசுப் பள்ளி!



திருச்சி மாவட்டம், எடமலைப்பட்டி புதூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடத்தை, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் ஆகியோர் சமீபத்தில் திறந்து வைத்தனர். இது அரசுப்பள்ளியா? தனியார் பள்ளியா என்று வியக்கும் அளவுக்கு அதன் உள்கட்டமைப்பு வசதிகள் பலரையும் வியக்க வைத்துள்ளன.

1932-ஆம் ஆண்டு முதல் எடமலைப்பட்டி புதூர் நடுநிலைப் பள்ளியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த பள்ளி 2017-ஆம் ஆண்டு முதல், அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அப்போது, பள்ளியின் மாணவர் எண்ணிக்கை 125-தான். நம் அரசு அமைந்த பின்னர், பள்ளியில் வசதிகள் அதிகரிக்கப்பட்ட நிலையில், தற்போது 850 மாணவர்கள் அப்பள்ளியில் பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளியின் வளாகத்திலேயே தொடக்கப் பள்ளியும் செயல்பட்டு வந்தது. இந்த நிலையில், திருச்சி மாநகராட்சி கல்வி நிதியின் மூலம் 18.41 கோடி ரூபாய் மதிப்பில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம், ஸ்மார்ட் வகுப்பறைகள், திறந்தவெளி அரங்கம், விசாலமான வகுப்பறைகள் என பள்ளி வளாகச் சூழல் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் சாய்கிரிஷ் என்ற மாணவன் ஜப்பானுக்கும், சிறார் திரைப்படம் மன்றத்தின் மூலம் சிறந்த விமர்சகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மித்ரா என்ற மாணவி ஹாங்காங்குக்கும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களுடன் சுற்றுப்பயணம் சென்று வந்துள்ளனர் என்பது இப்பள்ளியின் சிறப்பாகும். புதிய பள்ளி வளாகக் கட்டமைப்பில், மேலும் பல மாணவர்களின் பயணம் சிறக்கட்டும்!

---

## ஃப்ளாஷ்பேக்



### தேநீர் விடுதியில் கலைஞர்!



அ.ஆண்ட்ரூ டேவிஸ்

1957-ஆம் ஆண்டு கழகம் கண்ட முதல் சட்டப்பேரவைத் தேர்தலின் போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டார். அப்போது குளித்தலை தொகுதியிலுள்ள மேல் நங்கவரத்தில் தி.மு.க. தொண்டர் தங்கையன் அவர்களின் தேநீர் விடுதியில் கழகத் தொண்டர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. உடன் எனது தாத்தா சுந்தரம், கவுண்டம்பட்டி முத்து, குளித்தலை முத்துக்கிருஷ்ணன், நங்கவரம் தங்கையன், பெரியசாமி, திருப்பதி, நல்லதம்பி, அண்ணாவி ஆகியோர் உள்ளனர்.

**– அ.ஆண்ட்ரூ டேவிஸ்,**
**பொன்னகர் பகுதிக் கழகம்,**
**திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

கருவூலம்

## ஓட்டுநரும் கைது!

1957-ஆம் ஆண்டு கருப்புக் கொடி காட்டும் போராட்ட அறிவிப்பின்போது, பேச்சுரிமையை நிலைநாட்ட, தடையை மீறி கூட்டம் நடத்த முடிவு செய்தார் பேரறிஞர் அண்ணா. சென்னை, கடற்கரைக்குப் பேரணியாகச் சென்றபோது கைது செய்யப்பட்டார். அண்ணாவுடன் சென்ற கலைஞர், அன்பில் தர்மலிங்கம், அரங்கண்ணல், 'பண்ணை' முத்துக்கிருட்டினன் என பலரும் கைது செய்யப்பட்டனர். அண்ணாவின் கார் பறிமுதல் செய்யப்பட்டு, ஓட்டுநர் ரங்கசாமியும் கைது செய்யப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131